## நெல் சந்தைப்படுத்தல் சபை – 2015

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரச் சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 யூலை 03 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் பெறுபேறாக, நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கலைச் செய்வதற்கான அவசியம் காணப்பட்டதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற முடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனம் தொடர்ந்து இயங்குதல்

சபை கொள்வனவு செய்திருந்த நெல் கையிருப்பானது சந்தை விலைக்கும் கிரயத்திற்கும் அதிகமான குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டதால் அடுத்த போகத்தின்போது நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கும் விற்பனையால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கும் வருடாந்தம் திறைசேரியிடமிருந்தும் அரச வங்கிகளிடமிருந்தும் கடனைப் பெற வேண்டியிருந்தது. 2009 முதல் 2015 வரையான நெல் கொள்வனவு மற்றும் செயற்பாட்டுச் செலவினம் என்பவற்றிற்கு 03 அரச வங்கிகளிலிருந்து ரூபா 40,935.96 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் மேலும் ரூபா 17,965.3 மில்லியன் கடன் மீதியும் ரூபா 623.9 மில்லியன் கடனுக்கான வட்டியும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. இதன் காரணமாக, அரசாங்கத்தினது அல்லது பொது நிதி அனுசரணை இல்லாது சபை தொடர்ந்து இயங்குவதானது ஆபத்தை விளைவிக்காது என்று கணக்காய்வில் கருதுவதற்கில்லை.

### 2.2.2 தொடர்புடைய நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தல்

சபையின் முன்னாள் தலைவர் ஆரம்ப பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவராக நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் “CWE Construction and Engineering (Private) Limited” நிறுவனத்திற்கு நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்பட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 57,409,183 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதும், அக் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 இலங்கை கணக்கீட்டு நியமம்

#### இலங்கை கணக்கீட்டு நியமம் 7

நியமத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட கட்டிடத்தினது விற்பனைப் பெறுமதியான ரூபா 1,800,000 காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படவில்லை.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது சபைக்குரிய கட்டிடமொன்று ரூபா 1,800,000 க்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அதன் கிரயமும் திரண்ட தேய்மானமும் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டு கட்டிட விற்பனையாலான இலாபத்தை அல்லது நட்டத்தை விரிவான வருமானக் கூற்றில் சீராக்கல் செய்திருக்க வேண்டியபோதும், விற்பனைத் தொகையான ரூபா 1,800,000 மாத்திரமே விரிவான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) உரிமை மூலதன மாற்றக் கூற்றில் சுட்டிக் காட்டப்பட்ட முன்னைய ஆண்டிற்கான சீராக்கலாகிய ரூபா 3,770,089 காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு இலாபத்தில் சீராக்கல் செய்யப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எஞ்சிய கையிருப்பை நேரடியாகச் சரி, பிழை பார்த்து உறுதி செய்யாது கிரயமாகிய ரூபா 16,450,997,581 எஞ்சிய கையிருப்புப் பெறுமதியாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு

நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறாகக் காட்டப்பட்டிருந்த அரச வங்கிகளது கடன் மீதியாகிய ரூபா 5,492,938,778 உறுதிப்படுத்தும் கடிதங்களின் பிரகாரம் ரூபா 5,425,234,112 ஆகவிருந்தமையால் ரூபா 67,704,666 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் அவற்றைக் கணக்காவில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | இனங்காணப்படாத நெல் கொள்வனவு | 65,235,117 | விரிவான தகவல்கள் மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (ஆ) | கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 49,743,530 | |
| (இ) | Rice Millers கடனுக்கு விற்பனை | 45,249,804 | |
| (ஈ) | காய்ந்து போவதாலான கிரயம் (Driage) | 493,529,927 | குறித்த விகிதத்தைத் தீர்மானம் செய்தமைக்கான அங்கீகாரம் |
| (உ) | மூலதனப் பங்களிப்பு | 631,484,518 | உறுதி செய்யும் ஆவணங்கள் |
| (ஊ) | பொலிசெக் பைகளது செலவினம் | 123,185,563 | வழங்குநர்களும் சபையும் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் |
| (எ) | ஏனைய படிகள் | 28,336,705 | விரிவான பட்டோலை |
| (ஏ) | உபகரணங்கள் கட்டிடப் பொருட்கள், ஊழியர் காப்புறுதி, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்குமிடம், நீர், மின்சாரம், | | |
| | (i) ரம்பேவ நெல் களஞ்சியம் | 550,000 | உறுதி செய்யும் ஆவணங்கள் |
| | (ii) தப்போவ நெல் களஞ்சியம் | 230,000 | |

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,004,008,842 ஆகவிருந்த கடன்பட்டோர் மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 10,591,838 மீதியும் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்குமிடையேயான ரூபா 501,805,774 மீதியும் ஒன்று முதல் 03 ஆண்டுகள் வரையிலான ரூபா 1,470,801,401 மீதியும் ஓராண்டிற்குக் குறைந்த ரூபா 20,809,829 மீதியும் உள்ளடங்கியிருந்ததுடன் அம்மீதிகளை அறவிடுவதற்கு 2018 மார்ச் 20 வரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 8,828,409,980 கடன் கொடுத்தோர் மீதியில் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,104,545,456 மற்றும் 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடையேயான ரூபா 600,000,000 மற்றும் 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான ரூபா 597,309,986 மற்றும் 1 ஆண்டிற்குக் குறைவான ரூபா 6,526,554,538 மீதிகள் உள்ளடங்கியிருந்ததுடன், அம்மீதிகள் 2018 மார்ச் 20 ஆந் திகதியன்றும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி இருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இனங்காமை அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| நிதிப் பிரமாணம் 188(2) | 2009 முதல் தொடர்ந்து வரும் தேறாத ரூபா 9,865,603 வைப்புகள் சம்பந்தமாக இப்பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபையினது வாகனங்களில் அரச இலச்சினையும் சபையின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2012 முதல் நிதிக் கூற்றுக்களில் இறுதிக் கையிருப்பின் கீழ் காட்டப்பட்டவாறிருந்த சோயா போஞ்சி கையிருப்பாகிய ரூபா 3,302,853 மற்றும் அரிசிக் கையிருப்புப் பெறுமதியாகிய ரூபா 84,972 என்பன முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின்போது கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் மீளாய்வாண்டினது செயற்பாட்டு நட்டம் ரூபா.1,773,170,546 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நட்டம் ரூபா 1,126,931,765 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நட்டத்தில் ரூபா 646,238,781 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமானத்தில் ஏற்பட்ட ரூபா 857,328,765 குறைவே இதற்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டினது நிதிப் பெறுபேற்றில் 857 சதவீத நலிவு காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் 48 சதவீத நிதிப் பெறுபேற்று அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டில் 09 சதவீதத்தாலும் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் 57 சதவீதத்தாலும் நிதிப்பெறுபேறு நலிவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை நிதிப்பெறுபேற்றில் மீண்டும் சீராக்கல் செய்கையில் 2014 ஆம் ஆண்டினது சபையின் ரூபா 1,078,742,573 எதிர்மறைப் பங்களிப்பானது 59 சதவீதமான ரூபா 1,717,543,386 எதிர்மறைப் பங்களிப்பு வரை 2015 ஆம் ஆண்டளவில் நலிவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிருப்பைக் களஞ்சியப்படுத்துவதற்கு சபையினது களஞ்சியம் போதுமானதாக அமையாததால் அரச நானாவித வணிகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 15 (தற்காலிக களஞ்சியங்கள்) ரூபா 39,330,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஒவ்வொரு வலயத்திற்கும் தேவையான களஞ்சியங்களது எண்ணிக்கையைச் சரிவர இனங்கானாமையால் அனுராதபுரம், திருகோணமலை ஆகிய வலயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,488,000 பெறுமதியான 04 களஞ்சியங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) தற்காலிகக் களஞ்சியங்களை 10 முதல் 15 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம் என அரச நானாவித வணிகக் கூட்டுத்தாபனம் தெரிவித்திருந்தபோதும், அம்பாறை வலயத்திற்கு வழங்கப்பட்ட 06 களஞ்சியங்களில் பழுதுபார்க்கப்படாமல் பயன்படுத்தமுடியாத 02 களஞ்சியங்கள் காணப்பட்டன.

(இ) சபையால் வெளியிடப்பட்ட பீஎம்பீ/எப்1/14/2015 இலக்கமுடைய 2015 ஏப்ரல் 22 ஆந் திகதிய உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், முற்பணம் பெறப்பட்ட 07 நாட்களுக்குள் அது தீர்த்து வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2014 முதல் 2017 செப்டெம்பர் 20 வரை பெறப்பட்ட ரூபா 4,601,739 முற்பணத்தில் ரூபா 745,444 முற்பணமானது 2018 மே 31 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. அவ்வாறே, பெறப்பட்ட முற்பணம் தீர்த்து வைக்கப்படாதிருக்க அதே உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச வங்கி ஒன்றிலிருந்து பெறப்பட்டிருந்த வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 178,840,073 ஆகவிருந்தது. அதற்கான வட்டி ரூபா 14,769,460 ஆகும்.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு தொடக்கம் இடைப்போக்கில் உள்ள கையிருப்பாக ரூபா 54,385,222 எஞ்சிய நெல் கையிருப்பின் கீழ் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தது. மீளாய்வாண்டிலும் இதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யவிருக்கும் சந்தர்ப்பத்தில் பொலிசெக் பைகளைச் சபை கொள்வனவு செய்வதற்கான பொருட் கொள்வனவுக் கட்டளைகளை வழங்குவதன் காரணமாக அதி குறைந்த கூறு விலையைச் சமர்ப்பிக்கும் வழங்குநர்களுக்கு பைகளை முற்றாக வழங்க முடியாதிருந்தது. அதற்கமைய, ஏனைய வழங்குநர்களிடமிருந்து எஞ்சியவற்றைக் கொள்வனவு செய்வதால் பை ஒன்றிற்கு ரூபா 1.84 வீதம் 700,000 பைகளுக்கு ரூபா 1,288,000 மற்றும் ஒவ்வொன்றும் 37 சதவீதப்படி 1,083,000 பைகளுக்கு ரூபா 400,710 என மொத்தமாக ரூபா 1,688,710 கூடுதலாகச் சபையால் செலுத்தப்பட வேண்டியேற்பட்டது.

(ஆ) தேவையான அளவு பொலிசெக் பைகள் குறித்த கால வரம்பிற்குள் கிடைக்கப் பெறாமையால் விவசாயிகளிடமுள்ள பைகளில் நெல்லை நிரப்பித் தருமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். அதன் பொருட்டு பை ஒன்றிற்கு ரூபா 30 மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. அனுராதபுரத்திலுள்ள விவசாயிகளது 181,857 பைகளுக்கு ரூபா 5,455,710 வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த நியமத்திற்கமையாத பழைய பைகளையே விவசாயிகள் வழங்கியதால் அவை விரைவில் பழுதடைந்து களஞ்சியத்திலுள்ள நிலத்தில் நெல் விழுந்திருந்ததாகச் சபையின் உள்ளகக் கணக்காய்வாளர் அறிவித்திருந்தார்.

### 4.4 ஒப்பந்த நடவடிக்கைகள்

கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள சகல நிறுவனங்களுக்குரிய கட்டிடங்களைப் புனரமைத்தல் மற்றும் புதிய நிர்மாண வேலைகள் என்பன கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்துடன் இணைந்த நிர்மாணப் பிரிவிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சரால் 2010 செப்டெம்பர் 06 ஆந் திகதி வெளியிடப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டலைக் கடைப்பிடிக்காது 04 களஞ்சியங்களைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்துடன் இணைந்த நிர்மாணப் பிரிவு ஒன்று இல்லாதிருந்ததுடன், ஸ்தாபனத்தின் தலைவரது அறிவுறுத்தலுக்கமைய தனியார் கம்பனி ஒன்றிற்கு இவ்வொப்பந்தம் தொடர்பாக ரூபா 57,409,183 வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 இன் பிரகாரம் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 06 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்தினது கடிதத்தின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வவப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) வாகனக் கட்டுப்பாடு | (i) ஓட்ட அட்டவணைகள் முறையாகப் பேணப்படாமையும் குறிப்புகளில் மாற்றங்கள் செய்யப்படுவதும். |
| | (ii) வாகன நிரல் பேணப்படாமை. |
| | (iii) வாகனத்திற்கான கோரிக்கையும் அங்கீகாரமும் முறைப்படி நடைபெறாமை. |
| (ஆ) கொள்வனவுக் கட்டுப்பாடு | (i) குறித்த காலத்தில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமை. |
| | (ii) கையிருப்புப் பதிவேடு பேணப்படாமை. |
| | (iii) கொள்வனவு செய்யப்படும் பொலிசெக் பைகளது நியமத்தை பிரதேச அலுவலகங்கள் பரிசீலிக்காமை. |
| (இ) ஒப்பந்த நிர்வாகம் | பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கு அமையாது நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| (ஈ) களஞ்சிய நிர்வாகம் | (i) முறையான நியமப்படி நெல்லைக் களஞ்சியப்படுத்தாமை. |
| | (ii) களஞ்சிய அறிக்கைகள்/பதிவேடுகளை நாளாதுவரையாக்கிப் பேணாமை. |